இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 84 - ஒலி : 102 - திருவள்ளுவர் ஆண்டு 2056 - கார்த்திகை 06 - சனிக்கிழமை 22 நவம்பர் 2025 - மதுரை 12 + 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 102: Thiruvalluvar Year - 2056 - Karthigai 06 - Saturday 22 November 2025 - Madurai 12+8 Pages ₹ 5.00


## சட்ட முன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில்

# அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை ஓயமாட்டோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி !

**சென்னை, நவ.22-**

**ஆளுநர்கள் மசோதாக்களை நிறுத்தி வைப்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் திட்டவட்டமான தீர்ப்பு வழங்கியதையொட்டி, வலைதளம் வாயிலாக அறிக்கை வெளியிட்டுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், "சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம்!" என்று உறுதிபடக் குறிப்பிட்டுள்ளார்.**

சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களை நீண்ட நாட்கள் கிடப்பில் போட ஆளுநர்களுக்கு அதிகாரம் கிடையாது என்று உச்சநீதிமன்றம் அதிரடியாக தீர்ப்பளித்துள்ளது.

மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க காலக்கெடு விதித்து அளிக்கப்பட்ட தீர்ப்பு குறித்து குடியரசுத் தலைவர் எழுப்பிய 14 கேள்விகளுக்கு விளக்கம் அளித்த நீதிபதிகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கே அதிக அதிகாரம் என்றும் இரண்டு அதிகார அமைப்புகள் இருக்க முடியாது என்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்க குடியரசுத் தலைவர், ஆளுநருக்கு நீதிமன்றத்தால் காலக்கெடு விதிக்கமுடியாது என்று நீதிபதிகள் கூறியுள்ளனர்.

உச்சநீதி மன்றத்தின் மேற்காணும் தீர்ப்பை அடுத்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று வலைதளத்தில் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

- மாநில உரிமைகளையும், உண்மையான கூட்டாட்சியையும் நிலை நாட்டும் நமது போராட்டம் தொடரும்!
- சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க ஆளுநர்களுக்குக் காலக்கெடு விதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம்!

**தமிழ்நாடு அரசு தொடுத்த வழக்கின் தீர்ப்பின் மீது எந்தத் தாக்கமும் செலுத்தாது!**

குடியரசுத் தலைவரின் கேள்விகளுக்கு உச்சநீதிமன்றம் அளித்துள்ள விளக்கங்கள் ஆளுநருக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் பெற்ற 8 ஏப்ரல் 2025 தீர்ப்பின் மீது எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது.

**மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது!**

சொல்லப் போனால்,



> **த**மிழ்நாடு ஆளுநர் அவர்கள் உட்பட மாநில அரசுகளுடன் மல்லுக்கட்டும் அனைத்து ஆளுநர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் வழியில் செயல்பட வேண்டும் என்பதையும், மக்களின் விருப்பத்தைச் சட்டமியற்றி நிறைவேற்றும்போது, வேண்டுமென்றே ஒப்புதல் அளிக்காமல் காலத்தைக் கடத்தினால் நீதிமன்றங்களில் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்பதையும் நமது சட்டப் போராட்டத்தின் மூலம் கட்டாயமாக்கியுள்ளோம்! அரசியல்சட்டப்பிரிவு 361-க்குப் பின்னால் ஆளுநர்கள் ஒளிந்துகொள்ள முடியாது என்பதையும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

★ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் ஆட்சியைச் செலுத்த வேண்டும், மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது.

★ அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டகத்துக்குட்பட்டே அரசியலமைப்புப் பதவியில் இருப்போர் செயல்பட வேண்டுமே ஒழிய, அரசியலமைப்பை மீறிச் செயல்படலாகாது!

★ சட்டமுன்வரைவுக்கு ஒப்புதல் மறுப்பது / (தமிழ்நாடு ஆளுநர் செய்தது போல) காலவரையின்றி ஒப்புதல் வழங்காமல் நிறுத்தி வைப்பது எனும் நான்காவது விருப்பத் தேர்வு ஆளுநருக்கு இல்லை.

**மீண்டும் உறுதிப்படுத்திய உச்சநீதிமன்ற அமர்வு!**

★ மசோதாக்களின் மீது முடிவெடுக்காமல் காலவரையின்றி ஆளுநர் தாமதம் செய்ய இயலாது. அப்படி, எந்த விளக்கமும் இல்லாமல் நீண்டகாலம் இழுத்தடித்தால், மாநிலங்கள் நீதிமன்றங்களை அணுகலாம். ஆளுநர்கள் வேண்டுமென்றே தாமதிப்பதற்கு எதிராக வழக்குத் தொடுத்து, கேள்விக்குட்படுத்தி நியாயம் பெறலாம்;

- என்பனவற்றைத் தனது விளக்கத்தில் உச்சநீதிமன்ற அமர்வு மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், புனித சேவியர் கல்லூரி, அகமதாபாத் v. குஜராத் அரசு (1974) 1 SCC 717 வழக்கின் தீர்ப்பில் (பத்தி 109), 9 நீதிபதிகள் கொண்ட அமர்வானது, "நீதிமன்றங்கள் தெரிவிக்கும் கருத்துகள் என்பவை அரசு தலைமை வழக்கறிஞர்கள் தெரிவிக்கும் கருத்துகளைப் போன்றவை என்பதைக் கடந்து அவற்றுக்கென எந்த மதிப்பும் இல்லை எனத் தெளிவாகக் கூறியுள்ளது.

★ **காலவரையின்றிக் காலம் தாழ்த்தலாம்,**

★ **சட்டமுன்வடிவுகளுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் மறுக்கலாம் எனும் தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் கூற்றை உச்சநீதிமன்றத்தின் நேற்றைய கருத்து மீண்டுமொருமுறை நிராகரித்துள்ளது.**

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உட்பட மாநில அரசுகளுடன் மல்லுக்கட்டும் அனைத்து ஆளுநர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் வழியில் செயல்பட வேண்டும் என்பதையும், மக்களின் விருப்பத்தைச் சட்டமியற்றி நிறைவேற்றும்போது, வேண்டுமென்றே ஒப்புதல் அளிக்காமல் காலத்தைக் கடத்தினால் நீதிமன்றங்களில் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்பதையும் நமது சட்டப் போராட்டத்தின் மூலம் கட்டாயமாக்கியுள்ளோம்! அரசியல் சட்டப்பிரிவு 361-க்குப் பின்னால் ஆளுநர்கள் ஒளிந்துகொள்ள முடியாது என்பதையும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

**நீதிமன்றங்களே மக்களின் ஒரே நம்பிக்கை!**

அரசியல் சட்டத்தால் அமையப்பெற்ற எந்தப் பதவியும் அச்சட்டத்துக்கு அப்பாற்பட்டதில்லை என நான் திடமாக நம்புகிறேன். உயர்ந்த அரசியலமைப்புப் பதவிகளில் இருப்போரே அரசியலமைப்புச் சட்டத்தை மீறி நடந்தாலும், நீதிமன்றங்கள்தான் ஒரே நம்பிக்கை. ஆகவே, நீதிமன்றங்களின் கதவு தீர்வுபெறத் திறந்தே இருக்க வேண்டும். அது தனது கதவுகளை அடைத்தால், நமது அரசியலமைப்பின்படியான மக்களாட்சியில் சட்டத்தின் ஆட்சியைச் சிறுமைப்படுத்திவிடும்; அரசியல் உள்நோக்கத்தோடு செயல்படும் ஆளுநர்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பாக நடந்துகொள்வதை ஊக்குவிக்கும்.

**தொடர்ந்து உழைப்போம்! எங்கள் வாக்கைக் காப்போம்!**

தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தைச் சட்டங்களின் மூலம் நிறைவேற்ற, அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டு அரசியலமைப்புக் கருவிகள் செயல்படுவதை உறுதிசெய்யத் தொடர்ந்து உழைப்போம்! எங்கள் வாக்கைக் காப்பாற்றுவோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும்

# ஒன்றிய அரசைக் கண்டித்து தஞ்சை - திருவாரூரில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் அறிவிப்பு!

**சென்னை, நவ. 22-**

**நெல் ஈரப்பத அளவை அதிகரிக்காமல், நிவாரணமும் அளிக்காமல் டெல்டா விவசாயிகளை வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து 'மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சி'களின் சார்பில் தஞ்சாவூர் மற்றும் திருவாரூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.**

இதுகுறித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கொள்முதலில் ஈரப்பதம் தளர்வு தொடர்பான தமிழ்நாட்டின் கோரிக்கையை நிராகரித்துள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. கனமழை காரணமாக ஈரப்பதம் அதிகமாகியுள்ள நெல்லினைக் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டின் குரல் பிரதமரின் காதுகளுக்குக் கேட்கவில்லை.

கன மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்குக் கோரப்பட்ட நிவாரணமும் அளிக்கவில்லை, ஈரப்பத அளவையும் அதிகரிக்காமல் தமிழ்நாட்டின் டெல்டா விவசாயிகளை வஞ்சித்து வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாட்டின் கோரிக்கைகளை உடனடியாக மறுபரிசீலனை செய்து வேளாண் பெருங்குடி மக்களுக்கு ஒன்றிய அரசு நன்மை செய்திட வேண்டும் என வலியுறுத்தியும் 23.11.2025 அன்று தஞ்சாவூரிலும், 24.11.2025 அன்று திருவாரூரிலும் காலை 10.00 மணியளவில் 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி' சார்பில் "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்.

இவ்வாறு மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரை

# தமிழ்நாட்டின் ஏற்றுமதி 2.25 லட்சம் கோடி ரூபாயாக அதிகரிப்பு!

## இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு தகவல்!

*சென்னை, நவ. 22 -*

*தமிழ்நாட்டின் ஏற்றுமதி, நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாதங்களில், 2.25 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.*

*இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியாவிலேயே 31 ஆயிரத்து 517 தொழிற்சாலைகளுடன் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.*

அதன்படி, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வாகன உற்பத்தி ஆலைகளும், திருப்பூர், கோவை மாவட்டங்களில் ஜவுளி ஆலைகளும் அதிகளவில் உள்ளன.

இந்நிலையில், *தமிழ்நாட்டின் ஏற்றுமதி நடப்பு நிதியாண்டில் ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையிலான ஆறு மாதங்களில், 2.25 லட்சம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டின் இதே காலத்தில், ஒரு லட்சத்து 97 லட்சம் கோடி ரூபாயாக இருந்ததாகவும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஏற்றுமதி மட்டும், ஒரு லட்சம் கோடி ரூபாயுடன் முதலிடத்தில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சென்னை மாவட்டம் 32 ஆயிரத்து 422 கோடி ரூபாயுடன் இரண்டாவது இடத்திலும், திருப்பூர், 21 ஆயிரத்து 328 கோடி ரூபாய் ஏற்றுமதியுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. மோட்டார் வாகனம்,* ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், எலக்ட்ரானிக்ஸ் சாதனங்கள், ஜவுளி உற்பத்தியில் தமிழகம் முன்னணியில் உள்ளது.

அவற்றின் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், தங்களின் தயாரிப்புகளை உள்நாட்டு சந்தையில் விற்பதுடன், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்வதாக, இந்திய ஏற்றுமதி நிறுவனங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.